THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP.No.51/2015

Deposition of RW4 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent4 solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 10.01.2024.

Evidence Recorded Time: 1.36 P.M to 2.00 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மீனாகுமாரி | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | சுதர்ஷன் | **Calling** | : | மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மேட்டூர். |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேட்டூரில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 வரியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் என்ற இடத்தில் சுரேஷா, த/பெ.வெங்கடேஷா என்று உள்ளது என்றால் சரிதான். TN 36 K 0938 என்ற வாகனத்தின் ஓட்டுநர் சுரேஷா, த/பெ.வெங்கடேஷா என்றும் உரிமையாளர் தங்கவேல் என்று உள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வின் போது சுரேஷா, த/பெ.வெங்கடேஷா என்பவர்தான் ஓட்டுநர் என்பதற்கு காவல் நிலையத்தில் இருந்து ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சுரேஷா, த/பெ.வெங்கடேஷா என்பவரின் ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இணைதளத்தில் இருந்து எடுத்து வந்துள்ளேன். ஓட்டுநர் உரிமம் ஏற்கனவே காவல் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு விபத்து வழக்கிற்கு இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரிதான்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கில் இரண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கை உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 36 K 0938 வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்றால் சரிதான். இரண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கைளும் எந்த தேதியில் உள்ளது என்றால் இரண்டும் ஒரே தேதியில் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்திற்கும் அதே போல என்னிடம் காட்டப்படும் மற்றொரு மோட்டார் வாகன ஆய்வறிக்கையான ம.சா.ஆ.5 ஆவணத்திற்கும் ஓட்டுநர், உரிமையாளர் பெயர் மாறுபட்டு காணப்படுகிறது என்றால் சரிதான்.

<u>2–ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் அழைப்பாணையுடன் கொண்டு வந்த ஆவணம் போலீசார் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் கொண்டு வந்துள்ளேன் என்றால் சரிதான். <u>அது எ.ம.சா.ஆ.2 ஆகும்.</u> எ.ம.சா.ஆ.2–ல் தங்கவேல் தான் வண்டியை ஓட்டி வந்ததாக வேண்டுகோள் கடிதத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். ஒரே தேதியில் இரண்டு அறிக்கைகள் கொடுத்ததால் எது உண்மை என்றால் அதனை வழங்கிய அலுவலரிடம் தான் கேட்கவேண்டும்.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

ஒம்/–RW4,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.